சர்வே செய்யப்பட்டது. பின்னர் இதுகுறித்து எவ்வித முன்னேற்றமும் இல்லை. எனவே மீண்டும் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசு மீண்டும் தொழிற்பேட்டை தொடங்குவதற்கு அடுத்த ஆண்டாவது ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். எனது பூம்புகார் தொகுதியில் எவ்வித தொழிற்பேட்டையும் இல்லை; எவ்வித தொழிற்சாலையும் இல்லை. பூம்புகார்-மேலையூரில் தொழிற்பேட்டை தொடங்கினால் தொழில் முனைவோர் வெளி மாவட்டம் சென்று தொழில் தொடங்குவதைவிட்டு, இம்மாவட்டத்திலேயே தொழில் தொடங்க உதவியாக இருக்கும் என்பதோடு, எங்கள் பகுதியினுடைய பொருளாதாரம் சீரமைவதோடு, எங்கள் பகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். எனவே அடுத்த ஆண்டிலாவது தொழிற்பேட்டை தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலையூரில் சிப்காட்-தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்றாலும், குறைந்தபட்சம் 20-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவோர் தகுந்த தொழில் திட்டத்துடனும், முன்வைப்புத் தொகையுடனும் முன்வருவார்களானால் சிட்கோ நிறுவனம் மாவட்ட தொழில் மையத்துடனும், மாவட்ட ஆட்சியருடனும் கலந்தாலோசித்து தகுந்த நிலத்தைத் தேர்வு செய்து, புதிய தொழிற்பேட்டை தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 209, திரு. பி.எச்.பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

209—

மின் உற்பத்தி

***12002—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2003 ஏப்ரல் 8]

(அ) தமிழகத்தில் சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தனியார் கூட்டு முயற்சியுடன் திட்டங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து மின் உற்பத்தி செய்யலாம் என்பதால் இதற்குத் தனியார் கூட்டுமுயற்சியுடன் திட்டங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் கூறியிருக்கின்ற இந்த நிலையில், இந்த மின் உற்பத்தி நிலையங்கள் எங்கெங்கு அமைக்கப்படும் என்பதையும், மின் உற்பத்தி எவ்வளவு கிடைக்கும் என்பதையும், இதற்கான செலவு மதிப்பீடு எவ்வளவாக இருக்கும் என்பதையும், இந்த மின் உற்பத்திக்காக ஒரு யூனிட்டிற்கு சுமார் ரூ.2.06 பைசா ஆகின்ற இந்த நிலையில் தனியார் மையங்களை ஊக்குவிக்க நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து மின்உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கான கொள்கையைத் தமிழ்நாடு மின்சார வாரியம் வகுத்துள்ளது. ஏற்கெனவே இயங்கிவரும் மின்உற்பத்தித் திட்டங்களுடன் தற்போது மேலும் 7 திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி சர்க்கரை ஆலைக் கழிவு, அதாவது, கரும்புச் சக்கையை --பகாஸ்-- உபயோகப்படுத்தி 11 தனியார் சர்க்கரை ஆலைகளிலும் மற்றும் 3 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் இணை மின்உற்பத்தி செய்யப்பட்டு இயக்கத்தில் உள்ளது. அவை உற்பத்தி செய்யும் மின்சாரத்தில் அவற்றின் உபயோகம் போக மீதமுள்ளவற்றை தமிழ்நாடு மின்சார வாரியம்

விலைக்குப் பெற்றுக்கொள்கிறது. மேலும் 4 தனியார் சர்க்கரை ஆலைகளிலும் மற்றும் 3 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் மின்உற்பத்தித் திட்டங்கள் அமைக்கப்பட உள்ளன. இவ்வாறு மின்உற்பத்தி செய்வதிலிருந்து ரூ.2.88 காசுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் விலைக்கு வாங்கிக் கொள்கிறது. மேலும் ஆண்டு ஒன்றுக்கு 5% அதிகரித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனல் மின்நிலையம் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்திற்கு ஆகும் செலவைவிட, இந்தச் சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து மின்உற்பத்தி செய்யும்போது குறைவாக இருக்குமா என்பதையும், சர்க்கரை ஆலைகளிலிருந்து தனியார் கூட்டு முயற்சி மூலம் மின்உற்பத்தி நிலையங்கள் பின்தங்கிய மக்கள் வாழும் இடங்களில் அமைக்கப்படுமா என்பதையும், இழப்பில் இயங்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அனைத்திலும் படிப்படியாக ஆதாயம் பெறும் வகையில் இத்திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையிலிருந்து மட்டும்தான் மின்உற்பத்தி செய்யக்கூடிய நிலை உள்ளது. ஆகவே இதைத் தனியார் அமைக்க முன்வந்தால் அரசு நிச்சயமாக இதற்கு ஆர்வமுடன் அவர்களுக்கு ஆதரவு தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். ராஜா.

திரு. எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைக் கழிவுகளிலிருந்து மின்சாரத்தோடு எத்தனாலும் தயாரிக்க முடியும். இப்பொழுது மைய அரசு பெட்ரோலோடு 10% எத்தனாலையும் கலப்பதற்கு அனுமதி தந்திருக்கிறது. ஆகவே இதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

2003 ஏப்ரல் 8]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இதுபோன்று கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்காகத் திட்டங்களெல்லாம் தீட்டப்பட்டு விவசாயிகளுடைய ஒரு டன் கரும்புக்கு ரூ. 5 பிடித்தம்கூட செய்து பணத்தையெல்லாம் பிடித்துவிட்டார்கள். அப்படி இருக்கிறபோது, வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இப்பொழுது அந்தத் திட்டம் தொடங்கப்படுமா அல்லது சர்க்கரை ஆலைகளையெல்லாம் தனியாருக்கு விற்கக்கூடிய ஒரு சூழ்நிலையில்-முடிவு எடுத்திருப்பதாகக் கூறுகிறார்கள்-அப்பொழுது இந்தத் திட்டத்தினுடைய நிலை என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், அமைச்சர் பதில் சொல்லிவிட்டார், உட்காருங்கள். திரு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற சர்க்கரை ஆலைக் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்; இன்றைக்கு மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் இருப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதன்முதலாக இந்தியாவில் தமிழகத்தில்தான் சூரிய ஒளி மூலம் மின்சாரத்தை எடுக்கின்ற திட்டத்தை நிறைவேற்றினோம். ஆனால், இன்றைக்கு 250 மெகாவாட் சூரிய ஒளி, சூரிய சக்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை பஞ்சாபிலே தொடங்கியிருக்கிறார்கள். தமிழகத்தில் அதைப்போலத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு நாம் சாதாரணமாக மின்உற்பத்தி செய்யக்கூடிய செலவைவிட அதிகமாகச் செலவாகும் என்பதால், இதை உடனடியாகச் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 210, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.